RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s2518

OPEN ACCESS

# சங்க இலக்கியத்தில் மஞ்சள் நிற மலர்களின் தனித்துவமும் மருத்துவ குணங்களும்

பொ. ராணி [அ, *], கலைச்செல்வி [அ]

[அ] தமிழ்த்துறை, அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம், கோயம்புத்தூர்-641043, தமிழ்நாடு, இந்தியா

# Characteristic and Medicinal Properties of Yellow Flowers in Sangam Literature

**B. Rani [a, *], Kalaiselvi [a]**

[a] Department of Tamil, Avinasilingam Institute for Home Science and Higher Education for Women, Coimbatore-641043, Tamil Nadu, India

* Corresponding Author: rani_tam@avinuty.ac.in

Received: 29-07-2022
Revised: 23-09-2022
Accepted: 11-10-2022
Published: 10-12-2022

**ABSTRACT**

The beliefs, customs, culture, civilization of the people who lived ancient are based on love, heroism, etc. When Sangam literature mentions the two discriminating themes of internal and external life, the relationship and friendship they had with people, birds, animals, plants, and flowers can be well known. All these are shown in natural background. In this way, flowers become prominent. Flowers, which are a symbol of Tamil culture, takes special place from birth to death. This article examines the beauty and uniqueness of yellow flowers such as Avirai, Gongam, Chenpakam, Kannai, Vengai etc. and the medicinal properties of these flowers through Sangam literary songs.

**Keywords:** Sangam Literature, Yellow Flowers, Tamil culture, Sangam literary songs

## முன்னுரை

இயற்கையை மையமிட்ட சங்ககால வாழ்க்கைச் சூழலானது தமிழரின் வாழும் இடமாகவும் பண்பாட்டின் உறைவிடமாகவும் திகழ்ந்துள்ளது. இயற்கையாகவே அழகும் மனமும், பல்வேறு மூலிகை குணங்களேடு மருத்துவ நன்மைகளும் அடங்கியுள்ளன. மனித உடலில் ஏற்படும் சில குறைபாடுகளுக்கு மருந்தாகி குணமடையப் பயன்படுகின்றன. ஒவ்வொரு மலரும் ஒரு தனிச்சிறப்பபான குணத்தைக் கொண்டுள்ளன. மலர்களின் நறுமணம், நிறம், அமைப்பு போன்றவை மனிதர்களுக்குப் புத்துணர்வை அளிப்பதோடு மருந்தாகவும் பயன்படுத்தப்படுகின்றன. அவ்வகையில் மஞ்சள் நிற மலர்களின் தன்மைகள், மலரின் தனித்துவம், மருத்துவ குணங்கள் ஆகியவற்றை தொகுத்துரைப்பதாக இக்கட்டுரை அமைகின்றது.

## ஆவிரை

ஆவாரம்பூவே ஆவிரையாகும் (Tanner's senna, (Botanical name: Cassia auriculata L.)). பூளாப்பூ, ஆவாரம்பூ, எருக்கம்பூ ஆகியவற்றைச் சேர்த்து கட்டிய மாலையை தலைவன் மடலேறும் பனைமடலால் செய்யப்பெற்ற மடல் மாவுக்கு கழுத்தில் அணிவித்து மடலேறிச் செல்ல இருக்கிறேன்

என்று தலைவன் கூறுவதிலிருந்து ஆவாரம் பூக்களால் தொடுத்து கழுத்தில் மாலையாக அணிவிக்க பயன்படுத்தியுள்ளனர் என்ற செய்தியை அறியமுடிகின்றது (Mohan, 2011).

| எண் | பாடல் வரி | பாடல் எண் |
|---|---|---|
| 1. | பொன் நேர் ஆவிரை புது மலர் மிடைந்த | குறு - 173/1 |
| 2. | விரி மலர் ஆவிரை வேரல் சூரல் | குறி - 71 |
| 3. | பொன் நேர் ஆவிரை புது மலர் மிடைந்த | குறு - 173/1 |
| 4. | அணி பூளை ஆவிரை எருக்கொடு பிணித்துயாத்து | கலி - 138/9 |
| 5. | பூளை பொல மலர் ஆவிரை வேய் வென்ற | கலி - 138/18 |
| 6. | அணி அலங்கு ஆவிரை பூவோடு எருக்கின் | கலி - 139/8 |
| 7. | களரி ஆவிரை கிளர் பூ கோதை | அகம் - 301/14 |

ஆவிரம் பூவின் நிறமானது பொன் தகட்டின் பளபளப்பைப் போன்றிருக்கும் என்றும், பெண்கள் ஆவிரை என்னும் ஆவாரம்பூ மாலையை முலையில் தொங்கும்படி அணிந்திருப்பர் என்றும் சங்கஇலக்கியப் பாடல்களின் வழி சிறப்பாக எடுத்துக்காட்டியுள்ளனர்.



### மருத்துவப் பயன்கள்

தைப்பொங்கலில் முக்கியத்துவம் பெறுகின்ற இம்மலரானது நீரிழிவு நோய்க்கு மருந்தாகப் பயன்படுகிறது. ஆவாரம் இலையை தலையில் வைத்து கட்டி சென்றால் வெயிலின் தாக்கம் குறைந்து காணப்படும். தலைமுடி உதிர்வை தடுக்கின்றது. ஆவாரம் பூ 100 கிராம், வெந்தயம் 100 கிராம், பயத்தம்பருப்பு அரை கிலோ ஆகியவற்றை கலந்து அரைத்தப் பவுடரை வெந்நீரில் கரைத்து வாரம் இருமுறை தலைக்கு பயன்படுத்தினால் கூந்தல் கருமை அடையும். நீரில் ஆவாரம் பூக்களை ஊற வைத்து குடித்தால் அதீத தாகத்தை போக்கும். சிறுநீரைப் பெருக்கும். ஆவாரம் பூக்களை வதக்கி ஒரு மெல்லிய துணியில் சுற்றி கண்களில் ஒத்தி எடுக்கும் போது கண் நோய் குணமாகும். ஆவாரம்பூ, அதன் பட்டை, பனங்கற்கண்டு, வால் மிளகு, ஏலக்காய் சேர்த்து தண்ணீர் விட்டு பாகு போல் காய்ச்சி அதில் பால் கலந்து குடித்தால் உடம்பு வலுவடையும். சர்க்கரை நோய்யையும் குணப்படுத்துகின்றது.

## கோங்கம்

கோங்கம் (Common Name: Golden silk cotton tree, Botanical name: Cochlospermumgossypium (L.)) என்று சங்கப்பாடல் கூறும் மரத்தை இக்காலத்தில் இலவ மரம் என்று அழைக்கப்படுகின்றது. எல்லாப் பருவத்திலும் பூக்கள் பூத்திருக்கும். இதன் பூந்தாது பொன் நிறத்தில் இருக்கும் என்றும், கோங்கின் மகரந்தப் பொடியை மகளிர் மேனியில் பூசிக்கொள்வர் என்றும், எலியின் காது கோங்கம் பூவின் மையப் பகுதி போல இருக்கும் என்றும் புலவர்கள் தங்கள் பாடல்களில் பதிவு செய்துள்ளனர் (Backiyameri, 2013). மதுரையை அடுத்த வையை ஆற்றுப் படுகையில் பாணர் முற்றத்தில் கோங்க மலர்கள் கொட்டிக்கிடப்பதையும் கோங்கம்பூ குடை போலவிரிந்து பொன்னிறத்தில் இருக்கும் என்பதையும் எடுத்துக்கூறியுள்ளனர் (Mohan, 2011). சான்றாக,

| எண் | பாடல் வரி | பாடல் எண் |
|---|---|---|
| 1 | பல் பூ கோங்கம் அணிந்த காடே | நற் - 202/11 |
| 2 | பருவம் இல் கோங்கம் பகை மலர் இலவம் | பரி - 19/79 |
| 3 | குருகிலை மருதம் விரி பூ கோங்கம் | குறி - 73 |
| 4 | புது மலர் கோங்கம் பொன் என தாது ஊழ்ப்ப | கலி - 33/12 |
| 5 | தண் நறும் கோங்கம் மலர்ந்த வரை எல்லாம் | கலி - 42/16 |
| 6 | குருகிலை மருதம் விரி பூ கோங்கம் போங்கம் திலகம் தேம் கமழ் பாதிரி | குறி - 73,74 |
| 7. | கோங்கம் குவி முகை அவிழ ஈங்கை | நற் - 86/7 |
| 8. | பல் பூ கோங்கம் அணிந்த காடே | நற் - 202/11 |
| 9. | திணி நிலை கோங்கம் பயந்த | ஐங் - 343/2 |
| 10. | முறி இணர் கோங்கம் பயந்த மாறே | ஐங் - 366/5 |
| 11. | பருவம் இல் கோங்கம் பகை மலர் இலவம் | பரி - 19/79 |
| 12. | புது மலர் கோங்கம் பொன் என தாது ஊழ்ப்ப | கலி - 33/12 |
| 13. | தண் நறும் கோங்கம் மலர்ந்த வரை எல்லாம் | கலி - 42/16 |

போன்ற பாடல் வரிகளில் மதமதக்கும் எழிலுடன் பூண்துணி போட்ட மகளிரின் முலை போலக் கோங்கம் பூக்கள் பூத்ததிருக்கின்றன என்ற செய்தியையும் மலையில் மணக்கும் கோங்கம் பூக்கள் பாறை மீது கொட்டி பொன் அணிந்த யானை போல் காட்சி தருகின்றன என்றும் சிறப்பாக எடுத்துக்காட்டியுள்ளனர் (Mohan, 2011).



கோங்கம் yellow silk cotton flower

### மருத்துவப் பயன்கள்

2 முதல் 3 கிராம் அளவுள்ள பூக்களை நிழலில் 8 நாட்களுக்கு உலர்த்தி தூள் செய்து10 மில்லியுடன் தேனுடன் கலந்து குழந்தைகளுக்கு வெறும் வயிற்றில் அதிகாலையில் சுமார் மூன்று மாதங்கள் கொடுக்கும் பொது வயிற்றுவலி குறையும். மேலும் ஆஸ்துமா பிரச்சினை மற்றும் கண்நோய்கள் போன்றவற்றை குணமாக்குகின்ற தன்மை கொண்டது.

## சண்பகம்

சண்பகப் பூவின் (Champak, (Botanical name: Micheliachampaca L.)) நறுமணத்தின் காரணமாக 'களிப்புறு நறுமண மரம்' என்று அழைக்கப்படுகிறது. சிவாலயங்களில் காப்பு மரமாக விளங்குகின்றது. தற்காலத்தில் சண்பகப் பூவைக் கொண்டு நறுமணப் பொருட்களைத் தயாரிக்கின்றனர். சிவபெருமான் அணிந்துகொள்ளக்கூடிய பூவாகவும், சூர்அரமகளிரும் சண்பகப்பூவைச் சூடியிருந்தனர் என்பதற்குச் சான்றாக,

| எண் | பாடல் வரி | பாடல் எண் |
|---|---|---|
| 1 | அரும் பெறல் ஆதிரையான் அணி பெற மலர்ந்த பெருந் தண் சண்பகம் போல | கலி - 150 /21 |
| 2 | வண்டு அறைஇய சண்பக நிரை, தண் பதம் | பரி. வையை . 11/16,17 |
| 3 | மல்லிகை, மௌவல், மணம் கமழ் சண்பகம், | பரி. வையை 12/76 |
| 4 | துவர முடித்த துகள் அறும் முச்சி பெரு தண் சண்பகம் செரீஇ | திருமுருகு - 26/7 |

என்ற பாடல் வரிகளில் திருவாதிரை நாளுக்கு உரியவனாகிய சிவபெருமான் அணிகலனாக அணிந்து கொண்டிருக்கும் குளிச்சியான சண்பகப் பூவைச்சூடியிருப்பார் என்றும், மருதத்துறை (மதுரை) சிறப்பினைத் தோழி கூறும் பொழுது புன்னாகம், சுரபுன்னை, சண்பகம், மா, வாள்வீரம், வேங்கை, கணவிரி, காந்தள், தோன்றி, நீலம் முதலான மலர்கள் வெள்ளத்தில் அடித்து வரப்பட்டதால் மருதத் துறையை மலர்த்துறை என்று கூறும் அளவிற்கு வையை வெள்ளம் எல்லாப் பூக்களையும் இருகரை மருங்கிலும் கொண்டுசேர்த்தது என்றும், பொன்னிறமான குளுமை தரும் சண்பகப்பூவை காதுகளுக்கு மேல் பின்புறம் தவழும் படி சூர்அரமகளிர் தங்களது தலைமுடியில் சூடியிருந்தனர் என்றும் மேற்கண்டப்பாடல்களின் வழி கொன்றை மலரின் சிறப்புகளை எடுத்துக்காட்டியுள்ளனர் (Mohan, 2011)..



### மருத்துவப் பயன்கள்

செண்பகப் பூவை நிழலில் உலர்த்தி பொடிசெய்து கஷாயமாக காலை, மாலை இருவேளை குடிக்கும் பொழுது ஆண்மைக் குறைவு நீங்கும். காய்ச்சல் குணமாகும். சிறுநீர் பெருகும். நீர்க்கடுப்பு, நீர் எரிச்சல், நரம்புத்தளர்வு போன்ற நோய்கள் குணமாகும். செண்பகப் பூவுடன் தேன் கலந்து தினமும் காலையில் சாப்பிட்டு வந்தால் உடல் பலம் பெறும். பூக்களில் இருந்து கிடைக்கும் கெட்டியான பசை வேதியியல் பொருட்களால் கரைத்து எடுக்கப்பட்டு பலவித வாசனை திரவியங்கள் தயாரிக்க பயன்படுத்தப்படுகின்றன. செண்பகப் பூவிலிருந்து தயாரிக்கப்படுகின்ற சம்பா எண்ணெயை தேங்காய் எண்ணெயுடன் கலந்து தலையில் தேய்த்து வருவதால்முடி உதிர்தல், தலைவலி, கண்நோய்கள் போன்றவை குணமடைகின்றன.

## ஞாழல்

ஞாழல் மலர் (Botanical name: Caesalpinia cucullataRoxb) பசுமை கலந்த இளமஞ்சள் நிறம் உடையது. ஞாழல் என்பதற்கு அகநானூறு (708-10), மற்றும் ஐங்குறுநூற்றில் (103.2) 'புலிநகக்கொன்றை' என்றப்பொருள் கூறப்பட்டுள்ளது. குறிஞ்சி நில மகளிர் மணம் கமழும் ஞாழல் மலர்க்கொத்தைத் கூந்தலில் சூடிக்கொள்வார்கள் என்றும், அவ்வாறு மகளிர் விரும்பிச் சூடுவதால் இதற்குக் 'குமரி ஞாழல்' (நற்.54:9) என்று அழைக்கப்பட்டதைப் புலவர்கள் தங்கள் பாடல்களில் பதிவுசெய்துள்ளனர். காதலன் பிரிவால் காதலி மேனியில் ஞாழல் பூப்போல பசப்பு தோன்றியது எனக் கலித்தொகை (131:19) குறிப்பிடுகிறது (Mohan, 2011).

| எண் | பாடல் வரி | பாடல் எண் |
|---|---|---|
| 1. | சிறு வீ ஞாழல் தேன் தோய் ஒள் இணர் | நற் - 191/1 |

| | | |
|---|---|---|
| 2. | எக்கர் ஞாழல் இணர் படு பொதும்பர் | ஐங் - 144/1 |
| 3. | எக்கர் ஞாழல் சிறியிலை பெரும் சினை | ஐங் - 145/1 |
| 4. | ஞாழல் ஓங்கு சினை தொடுத்த கொடும் கழி | அகம் - 20/5 |
| 5. | கடல் ஆடு மகளிர் கொய்த ஞாழலும் | அகம் - 216/8 |
| 6. | சிறு வீ ஞாழல் | நற் - 31/5 |
| 7. | தெரி இணர் ஞாழலும் | கலி -127/1 |
| 8. | இதுவே நறு வீ ஞாழல் மா மலர் தாஅய் | நற் - 96/1 |
| 9. | பசு நனை ஞாழல் பல் சினை ஒரு சிறை | குறு - 81/3 |
| 10. | நனை முதிர் ஞாழல் தினை மருள் திரள் வீ | குறு - 397/1 |
| 11. | ஐயவி அன்ன சிறு வீ ஞாழல் | குறு - 50/1 |
| 12. | பொன் இணர் ஞாழல் முனையின் பொதி அவிழ் | ஐங் - 169/2 |
| 13. | செம் வீ ஞாழல் கரும் கோட்டு இரும் சினை | அகம் - 240/1 |

ஞாழல் என்பது ஒரு கடற்கரைத் தாவரம். இது உயரமான புதர்வகைச் செடி. இதன் இலைகள் சிறியதாகவும் பெரியதாகவும் இருக்கும். கிளைகள் மிகவும் உயரமாக நீண்டிருக்கும். பூக்கள் சிறியதாக செந்நிறத்திலும் பொன்நிறத்திலும் கொத்துக்கொத்தாக நறுமணம் வீசும். நன்கு மலர்ந்த மலர்கள் தினையைப் போன்றும், சிறிய பூக்கள் வெண்சிறுகடுகினைப் போன்றும் இருக்கும். நெய்தல் நிலப்பூ என்றாலும் எல்லா நிலங்களிலும் பூக்கும் என மேற்கண்டப்பாடல்களின் வழிசிறப்பாக எடுத்துக்காட்டியுள்ளனர் (Mohan, 2011)..



### மருத்துவப் பயன்கள்

கொன்றை மலர்கள் சொரியாசிஸ், ஆஸ்துமா, கடுமையான மூச்சுக்குழாய் அழற்சி, இருமல், நீரிழிவு மற்றும் குழந்தைகளின் வலிப்பு ஆகியவற்றின் சிகிச்சையில் பயன்படுத்திவருகின்றனர்.

## கொன்றை

கொன்றை அல்லது சரக்கொன்றை (Common Name: Indian laburnum. Botanical name: Cassia fistula L.) எனப்படும் மலர்கள் மஞ்சள் நிறத்தில் பூக்ககின்றன. கேரள மாநிலத்தின் மாநில மலராகும். தமிழ்புத்தாண்டான சித்திரையை வரவேற்கும் விதமாக, பொன்னிற கொன்றைமலர்கள் சரம்சரமாக பூத்துக் குலுங்கும். சிவபெருமானுக்கு உகந்தமலர் என்பதால், பலகோவில்களில் தலவிருட்சமாக உள்ளது. கொன்றைபூ சிவாலயங்களில் காப்புமரமாக உள்ளது. சித்திரைப்பூ, சுவர்ணபுஷ்பம் என்ற பெயர்களில் அழைக்கப்படுகின்றது.

| எண் | பாடல் வரி | பாடல் எண் |
|---|---|---|
| 1. | அயம்திகழ் நறுங்கொன்றை | கலி - 150/1 |
| 2. | புதுப்பூங்கொன்றைக்கானம், கார்எனக் கூறினும்" | குறு- 21/3-4 |

| | | |
|---|---|---|
| 3. | ஆய்பொன் அவிர் இழை தூக்கியன்ன நீடுஇணர்க் கொன்றை" | அக - 364/ 4-5 |
| 4. | 'நாறுஇணர்க் கொன்றை வெண்போழ்க் கண்ணியர்' | பதிற்று- 57/13 |
| 5. | ஒழுகிய கொன்றைத் தீம்குழல் முரற்சியர் கோவலர்' | கலி - 106/ 3-4 |
| 6. | அடர்பொன் என்னச் சுடரிதழ் பகரும்<br>சுடுபொன் அன்ன கொன்றை சூடி | ஐங் - 430/ 2,<br>432 / 2 |
| 7. | மகளிர், கொன்றை மென்சினைப் பனிதவழ் பவைபோல், பைங்காழ் | பெரும் - 327-329 |
| 8. | இழையணி மகளிரின் விழைதகப் பூத்த நீடுசுரி இணரசுடர் வீக்கொன்றைக் காடுகவின் பூத்த ஆயினும் | நற் - 302 / 1-3 |



'கடுக்கை' என்று அகநானூறு பாடல் (393 : 15) குறிக்கின்றது (Mohan, 2011).. கொன்றை மரங்கள் புதிய பூக்களுடன் மலர்ந்து கார்ப் பருவத்தின் வருகையை தலைவியிடம் உரைப்பதாக புலவர் காட்சிப்படுத்தியுள்ளார். 'சுடுபொன் அன்ன கொன்றை' என்றும், 'பொன் என மலர்ந்த கொன்றை' என்றும், 'பொன் எனக் கொன்றை மலர' என்றும், 'சுடர்ப் பூங்கொன்றை' என்றும் 'தூங்குஇணர்க் கொன்றை' என்றும் (ஐங்குறுநூறு, 432 : 2, 420 : 1; நற்றிணை, 242 : 3; மதுரைக்காஞ்சி, வரி 277; அகநானூறு, 115 : 11; குறிஞ்சிப்பாட்டு, வரி 86) போன்ற பாடல் வரிகளில் எடுக்காட்டியுள்ளனர். 'கொன்றைப் பூவின் பசந்த உண்கண்' என்றபாடலில் தலைவனின் பிரிவால், தலைவியின் கண்கள் கொன்றைப் பூப்போலப் பசலை படர்ந்து காணப்பட்டது. கொன்றை பூங்கொத்தை ஆங்கிலத்தில் 'Golden Shower' என்றும், 'Streaming gold' என்றும் அழைக்கப்படுகின்றது. மாமல்லபுரத்துச் செல்வமகளிர் தம் இடையில் கொன்றை அரும்பு போன்ற பொற்காசுகள் கோர்த்த வடத்தை அணிந்திருந்தனர் என்றும், முல்லை நிலத்தில் கார்கால மழையால், ஆராய்ந்து எடுத்த பொன்னால் செய்த அணிகளைத் தொங்கவிட்டாற் போன்ற நீண்ட பூங்கொத்துகளைக் கொண்ட கொன்றை மரங்கள் பூத்திருந்தன என்றும் புலவர்கள் நயம்படக் காட்சிப்படுத்தியுள்ளனர் (Mohan, 2011).

### மருத்துவப் பயன்கள்

சரக்கொன்றை மரத்தின் பூ, இலை மற்றும் மரப்பட்டை போன்றவை மருத்துவக்குணத்தை கொண்டுள்ளது. சரக்கொன்றை பூவையும் இளம்கொழுந்தையும் துவையல் செய்தும், பூவை கஷாயம் செய்தும்மருந்தாக உட்கொள்ளும் பொழுது சர்க்கரை வியாதி மற்றும் வயிற்றுக்கோளாறு, மேகக்கோளாறு போன்றவையும் குணமடைகின்றது. பூவை வதக்கித் துவையலாக செய்து உணவுடன் சாப்பிட மலச்சிக்கல் அகலும். சரக்கொன்றைப் பூவையும் கொழுந்தையும் சமஅளவு அரைத்துக் கொட்டைப் பாக்களவு பாலில் கலந்து அருந்தும் பொது காமாலை நோய் குணமடைகிறது. கொன்றைப்பூ ஒரு கைப்பிடி அளவுடன் 100 கிராம் நல்லெண்ணை சேர்த்து பூக்கள் சிவந்து வரும் வரை காய்ச்சி எண்ணெய் ஆறியபின் அதனை வடிகட்டி காது சம்பந்தமாக ஏற்படும் கோளாறுகளுக்கு காலை மாலை ஒரு காதுக்கு இரண்டு துளி வீதம் விட்டால் காது சம்பந்தமான கோளாறுகள் குணமடைகின்றன.

## வேங்கை

முற்காலத்தில் வேங்கை மலர் (Common Name: Indian Kino Tree Botanical name: Pterocarpus marsupium Roxb.) பூப்பதை வைத்து புத்தாண்டை கணக்கிட்டனர். இப்பூக்கள் மஞ்சள் நிறத்திலும் சிவப்பு நிறத்திலும் பூக்கின்றன.

| எண் | பாடல் வரி | பாடல் எண் |
|---|---|---|
| 1. | வேங்கை ஓங்கிய தேம் கமழ் சாரல்<br>வேங்கை முன்றில் குரவையும் கண்டே | நற் 259/2<br>276/10 |
| 2. | பெரு வரை வேங்கை பொன் மருள் நறு வீ கரும் கால் வேங்கை மா தகட்டு ஒள் வீ மன்ற வேங்கை மலர் சில கொண்டுமலை உறை கடவுள் குலமுதல் வழுத்தி, | ஐங் 217/1, 219/1, 259/2 |
| 3. | மெல் இணர் வேங்கை வியல் அறை தாயின உறழ நனை வேங்கை ஒள் இணர் மலர | பரி 14/11, 15/32 |
| 4. | புலி உரி வரி அதள் கடுப்ப, கலி சிறந்து, நாள்பூ வேங்கை நறு மலர் உதிர | 205/20 |
| 5. | வேங்கை வெற்பின் விரிந்த கோங்கின் அகடு நனை வேங்கை வீ கண்டு அன்ன | புறம் 336/9, 390/21 |

இம்மரத்தின் அடிப்பகுதி கரியதாகவும், கிளைகள் பெரிதாகவும் இருக்கும் என்றும், வேங்கை மலரானது மலைச்சாரலின் கண் பொன்னிற பூவுடன் ஓங்கி வளர்ந்து மணம் வீசும் என்றும், பெருமலையில் வேங்கை மலர் பொன் போன்று பூத்திருக்கிறது என்றும், வேங்கை மலர்கள் சிலவற்றைக் கொண்டு மலையில் வாழும் குலமுதலான தெய்வம் முருகனுக்குப் பூசனை செய்து முருகனை வழிபடுகிறார்கள் என்றும், வேங்கை மலரானது புலித்தோல் போல மரத்தில் தலையை விரித்துக்கொண்டிருக்கும் என்றும். வேங்கை பூத்திருக்கும் மலையில் கோங்கு பூத்திருப்பது போல வனப்பு மிக்க முலைத் தோற்றத்துடன் புன்னகையுடன் தலைவி இருக்கிறாள் என்றும் மேற்கண்டப் பாடல்களில் புலவர்கள் உவமைபடுத்தியுள்ளனர்.



### மருத்துவப் பயன்கள்

வயிற்றுப் போக்கு, ரத்தக்கசிவு, காய்ச்சல் குணமாகவும், புண்கள் மற்றும் பிறதோல் நோய்களுக்கு சிகிச்சையளிக்கவும் வெளிப்புறமாகப் பயன்படுத்தப்படுகின்றன.

## முடிவுரை

பண்டைய காலந்தொட்டு இன்றைய காலம் வரை மனிதனின் இன்பத்திலும் துக்கத்திலும் பங்கெடுப்பது மலர்களாகும். மனிதனின் மனநிலையை செம்மைப்படுத்துவதை அறிந்து நம் முன்னோர்கள் ஒவ்வொரு மலரையும் ஒவ்வொரு காரியத்துக்கு என்று பயன்படுத்தி வந்துள்ளனர். இயற்கையிலிருந்த பல்வேறு மருந்துகள் உள்ள நிலையில் மலரில் இருந்து பெறப்படும் அபூர்வசக்திகளைக் கண்டெடுத்து மருந்துகளைத் தயாரித்து உடல் நலம், மனநலம் இவ்விரண்டையும் குணப்படுத்துவதாக கண்டறிந்துள்ளனர். இந்திய மருத்துவத்தில் மலர்களை பழங்காலத்தில் இருந்தே பயன்படுத்தி வந்துள்ளனர். அழகிய நறுமணம் வீசும் மலர்களே மனதிற்கு ஆற்றலாகி உடல் நலத்தை சீராக்குகின்றன. இத்தகைய அற்புத ஆற்றல் கொண்ட மலர்களை நம் முன்னோர் நல்ல முறையில் வகுத்து நம்மையும் அதன் வழி நடக்க வைத்திருக்கின்றனர். குறிப்பிட்ட மலர்கள் அதற்கு ஏற்ற வியாதிகளுக்கு மருந்தாக வழங்கப்படுவதன் மூலம் மனதில் நேர்மறை ஆற்றல் உருவாக்கி, வியாதிகளை குணமாக்குகின்றன. ஒவ்வொரு வகைப் பூக்களின் தனித்தன்மையும், அவை தோன்றும் விதம், வளரும் விதம் போன்றவற்றை தங்கள் பாடல்களில் எடுத்துக்காட்டியுள்ளனர். இத்தகையப் பூக்கள் அலங்காரத்தின் ஒரு பகுதியாக மட்டும் இல்லாமல் சடங்குகள் மற்றும் வழிபாட்டின் ஒரு

பகுதியாகவும் பயன்படுத்தப்படுகின்றன. பொதுவாக பூக்களுக்கு இயற்கையாக பல நல்லகுணங்கள் உள்ளன. பலவகையான பூக்கள் மருத்துவத்துக்கும், வாசனை திரவியங்கள் தயார் செய்வதற்கும் பயன்படுகின்றன. மணம் வீசும் மலர்கள் மருத்துவ குணத்தையும் பெற்று விளங்குகின்றது என்பதை உணர்ந்து பயன்படுத்தி ஆரோக்கியம் பெறுவோம். இயற்கை அளித்த கொடையினைப் பயன்படுத்தி நோயின்றி வாழ்வோம்.

## References

Backiyameri, F. (2013) Tamilar Payanpadum Panpadum, Anjanachimilp Pathippagam, Chennai, India

Mohan, R. (2011) Pathupatu Molamum Uraiyum, New Century Book House, Chennai, India

Thatchinamoorthy, A. (2007) Ainkurunuru, New Century Book House, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License